# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,463 — 1925 ம் வருஷம் வைகாசிமீ 22 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி விற்பனவுகள்.

No. 2,281, N.W. P.—1925 ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 7 ந் திகதி, செவ்வாய் கிழமை முற்பகல் 10 மணிக்கு சலாபம் கச்சேரியில் தன் ஆபிசில் வடமேல் மாகாணத்து புத்தளம் டிஸ்திறிக் கவணமேந்து உதவி ஏசண்டவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது நீந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 37 காணித் துண்டுகள் வடமேல்மாகாணத்து சலாபம் டிஸ்திறிக், பிற்றிகல்கோறளை வடக்குப்பகுதியிலிருக்கின்றது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பிளான் இலக்கம் 4,997. குறிச்சி—அம்பகந்தவில்ல. உரித்தாளி—முடி. | | | | |
| 3 | தவிப்பொல்காவல அல்லது மூதுவெல்ல | டபிள்யு. லாசர் பறுணாந்து .. | பாழ்நிலம் .. | 2 | 3 | 18 | 75* |
| | | | பிளான் இலக்கம் 4,828. குறிச்சி—சலாப நகரசபைக்கு ளடங்கிய எல்லைகளுக்குள். உரித்தாளி—முடி. | | | | |
| 2 | கனக்ககுளம் அல்லது ருதபிற்றிய | ஏ. ஜே. பறுணாந்து .. | சதப்பு நிலம் .. | 0 | 2 | 34·8 | 350* |
| | | | பிளான் இலக்கம் 4,659. குறிச்சி—ஆனைவிழுந்தாவ. உரித்தாளி—முடி. | | | | |
| 1 | ஆனைவிழுந்தாவகலே .. | ஜீ. கந்தப்பு .. | .. பெருங்காடு .. | 2 | 0 | 7 | 50* |
| | | | பிளான் இலக்கம் 4,679. குறிச்சி எருன்வல. உரித்தாளி—முடி. | | | | |
| 1 | எருன்வலகலே .. | எஸ். எம். அப்புஹாமியும் 8 பேர் மறுபேரும் | காடு .. | 18 | 0 | 0 | 75* |
| 2 | டிட்டோ .. | டிட்டோ .. | .. காடு .. | 10 | 3 | 37 | 75* |
| | | | பிளான் இலக்கம் 5,266. குறிச்சி—மைக்குளம் உரித்தாளி—முடி. | | | | |
| 1 | பனையடிபத்தயிதோட்டம் | எல். ஜீ. டிலாட்டன் பெண்சாதி .. | காடு .. | 1 | 0 | 6 | 165 |
| 2 | டிட்டோ .. | டிட்டோ .. | .. காடு .. | 0 | 1 | 11 | 165 |
| 3 | டிட்டோ .. | பிலிப் மார்க்கு .. | .. காடு .. | 2 | 3 | 18 | 160 |
| 4 | டிட்டோ .. | கிக்கசுவான் .. | .. காடு .. | 0 | 1 | 0 | 160 |
| 5 | டிட்டோ .. | எல். ஜீ. டிலாட்டன் பெண்சாதி .. | காடு .. | 28 | 3 | 35 | 165 |
| | | | பிளான் இலக்கம் 5,537. குறிச்சி—குசலே. உரித்தாளி—முடி. | | | | |
| 1 | குசலேகலே .. | | .. காடு .. | 2 | 2 | 39 | 62·50 |
| 2 | டிட்டோ .. | பீ. ஜோன் பறுணாந்து | .. காடு .. | 2 | 0 | 17 | 62·50 |
| 3 | டிட்டோ .. | டிட்டோ .. | .. காடு .. | 2 | 0 | 17 | 62·50 |
| 4 | டிட்டோ .. | டிட்டோ .. | காடு .. | 2 | 0 | 0 | 62·50 |
| 5 | டிட்டோ .. | — | .. காடு (ரோட்டுக்குச் சேமித்த நிலம்) | 0 | 0 | 37 | —† |
| 6 | டிட்டோ .. | — | .. குளக்கட்டுக்குச்சேமித்தநிலம் | 0 | 0 | 27 | —† |
| | | | பிளான் இலக்கம் 4,646. குறிச்சி—ஆனைவிழுந்தாவ. உரித்தாளி—முடி. | | | | |
| 1 | எகொடகம்தெங்கால .. | சீ. ஏ. மெனிக்ஹாமி | .. சேனை, பற்றைக்காடு, பழம் புகையிலைத் தோட்டம் | 1 | 2 | 7 | 75* |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 5,416. குறிச்சி—குடாமனவேரிய உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | சியம்பலகாவத்த .. | சீ. ஏ. மெனிக்ஹூல | .. தென்னந்தொட்டம் .. | 1 | 2 | 17 | 495* |
| | பிளான் இலக்கம் 5,593. குறிச்சி—கருக்குளிய. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | றோட்டுக்குச் சேமித்த நிலம் | பஹுகஸ்வெவதோட்டகாரர் | முகாமைக் றோட்டுக்குச் சேமித்த நிலம் | 1 | 3 | 26 | 510 |
| | பிளான் இலக்கம் 5,560. குறிச்சி—முத்தபாண்டிய. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | முதுவெறல .. | — | .. பாழ்நிலமும் கடற்கரைக்குச் சேமித்த நிலமும் | 2 | 2 | 26 | —† |
| 2 | தல்காவத்த .. | டபிள்யு. எஸ். தாமஹும் ஜீ. எஸ் பீரிசும் | பாழ்நிலம் .. | 8 | 0 | 19 | 66 |
| | பிளான் இலக்கம் 5,417.. குறிச்சி—மகாமனவேரிய உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | மகாமனவேரியவத்த .. | — | .. தென்னந்தோட்டம் டபிள்யு எஸ். ஜி. பறுனந்து சேர்த்தஇடம் | 11 | 2 | 1 | 155 |
| | பிளான் இலக்கம் 4,453. குறிச்சி—வீரபாண்டியான. உரித்தாளி—முடி. | | | | | | |
| 2566 | வீரபாண்டியானகலே .. | — | .. சேனை .. .. | 70 | 2 | 4 | 75‡ |
| | பிளான் இலக்கம் 5,387. குறிச்சி—குசலை. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | பனிஅவியல்காணி .. | கே. முருகன்பிள்ளை | .. காடு .. .. | 0 | 2 | 16 | 112 50 |
| 2 | ஷை .. | — | .. காடு (பாதைக்குச் சேமித்த நிலம்) | 0 | 0 | 16 | —† |
| | பிளான் இலக்கம் 5,510. குறிச்சி—பங்கதெனிய. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | பங்கதெனியகலே .. | பேதுறு பெறறு | .. காடு .. .. | 2 | 2 | 9 | 40 |
| | பிளான் இலக்கம் 5,357. குறிச்சி—கறவிற்ற. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | பிகிம்பியகலே .. | — | .. பெருங்காடு .. | 5 | 0 | 29 | 165* |
| 2 | ஷை .. | முகம்மதுதம்பி, சலாபம் | .. ஷை .. | 2 | 1 | 26 | 165* |
| 4 | ஷை .. | ஷை | .. ஷை .. | 2 | 3 | 13 | 165* |
| | பிளான் இலக்கம் 4,142. குறிச்சி—ஆருச்சிககட்டுவ. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1328 | கும்புக்காகேன .. | டபிள்யு பீ. கிரிகோரிஸ் பறநாந்து | செய்கைபண்ணிய சேனை .. | 2 | 0 | 32 | 45 |
| | எவ். வீ. பி. பிளான் இலக்கம் 75. குறிச்சி—எலபகல. உரித்தாளி—முடி. | | | | | | |
| 2N | ககட்டகாவத்த .. | டபிள்யு. பீ. கிரிகோரிஸ் பறநாந்து | தோட்டம், சேர்க்கப்பட்டஇடம் | 2 | 1 | 32 | : 93* |
| | பிளான் இலக்கம் 5,390. குறிச்சி—இனிகொடவெல. உரித்தாளி—முடி. | | | | | | |
| 8 | நெபடகாகல .. | — | .. தோட்டம் நீர்கொழும்பும் ஏ. யீ. அசறப்பாசேர்த்தஇடம் | 0 | 0 | 8 | 168 |
| 9 | ஷை .. | — | .. தோட்டம் இனிகொடவல ஜீ. எஸ். ஜோசா சோத்த இடம் | 0 | 0 | 10 | 168 |
| 10 | வெலிகல .. | — | .. தோட்டம் இனிகொடவல ஜீ. எஸ் திகான சேர்த்த இடம் | 0 | 0 | 20 | 228 |
| 11 | ஷை .. | — | .. தோட்டம் ஏ. யி. அசறப்பா சேர்த்த இடம் | 0 | 0 | 13 | 160 |
| 12 | கும்புக்காவெவ .. | — | .. அழிந்தகுளமும் குளக்கட்டும் | 4 | 3 | 6 | 60 |
| 28 | கோங்காகேன .. | — | .. சீ. யி. கொறயாசேர்த்தஇடம் | 1 | 0 | 23 | 160 |

* திரும்ப விற்பனவு.
† சேமிக்கப்பட்ட நிலம் (விற்பனவுக்கல்ல.)
‡ சலாபக் குருநாகல் றோட்டில் 37 ம் கட்டைக்கு வடக்கே $1\frac{3}{4}$ மைல் தூரத்தில்.

இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்கள் புத்தளம் உதவி ஏசன்றரிடத்திலும் அவைகளின படங்கள் அளவைக்கதோர் தலைவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொழும்பு, 1925 ம் ஹூ வைகாசிமீ 19 ந் தேதி.

ஈ. பீ. அலெக்ஸ்சண்டர்,
அக்றிங் கலோனியல் சக்கிறத்தார்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம்டாம்பையிலுள்ள சுதேச கலவன்பாடசாலைக்காகிய ஈன்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 18,684 குறிச்சி—டாம்பே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பூருபொல்ககாவத்த .. | 12 தென்னைகளும் கிடுகால் வேய்ந்த கொட்டிலும் கக்கூசும் | ஆர். கறோலிஸ் அப்புவும் மற்றவர்களும் | 0 | 3 | 5 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ௵-த்துக காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ௵ ஜூன் மாசம் 15 ௳ தேதியலன்று 12 மணிக்கு இந்தக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1925 ௵ மேய்௴ 19 ௳.

ஆர். என். தேன்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் களனிப்பள்ளத்தாக்கு றெயில்பாதையில் 4 மைல் 40 சங்கிலியில் வைக்க நிச்சயித்திருக்கும் தங்கல் கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 18,691. குறிச்சி—கிறிலப்பொன கிழக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | சியம்பலககாவத்த | .. 19 தென்னைகள் | .. மிசிஸ் டீ. ரீ. ஜே. வீரசேகரா | .. 0 1 35·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ௵ ஜூன்மாசம் 18 ௳ தேதியலன்று 12 மணிக்குஇந்தக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1925 ௵ மேய்௴ 19 ௳.

ஆர். என். தேன்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றம்புக்கணையில் இரண்டு அறைகளுள்ள கூலி லாயம் கட்டுவது என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை. அஃதாவது:—

கிராமக்கடசி படத்து இலக்கம் 162. குறிச்சி—கொடகண்டினிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 33A | பொல்கொட்டுவேவத்தை .. | தென்னந்தோட்டம் .. | எஸ். எம். அப்துல் அனீஸ்ம் வேறு இருபேரும் | 0 0 17·25 |
| 34A | நிக்கமடித்தகும்புற பில்லவே வத்தை | ஷை .. | என். சிறிமதியும் மறுபேரும் | .. 0 0 0·6 |
| 35A | ஷை .. | ஷை .. | ஷை | .. 0 0 25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ௵ ஆனி மாசம் 23 ௳ தேதியலன்று 10 மணிக்கு றம்புக்கணையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1925 ௵ வைகாசி௴ 15 ௳

ஜே. ஆர். வோல்ற்றஸ்.
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 8 810 அம்பாந்தோட்டை]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடன்மையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1925 ௵ (மேய்) வைகாசி௴ 22 ௳ திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம் 1899 ம். 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்தியவிசேஷ உத்தியோகத்தர் எம். ரீ. ஆர்ச்சிபோல்ட் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடன்மையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். ரீ. ஆர்ச்சிபோல்ட்,
விசேஷ உத்தியோகத்தர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஒப்பிசர்) நில நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜெனரல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனும் உள்ள வளியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் கம்பாந்தோட்டை டிஸ்திறிக் மாகம்பத்து தெவுறன்வீகேறக் கிராமத்திலிருக்கும் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

இன்செற் நம்பர் 12. றொப்போ பிரதமபடம் நம்பர் 3.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 131 | தொற்றகும்புக்கே | 78 2 30 |
| 132 | உரகொபாவும் ஹேட்டும் | 0 2 24 |
| 133 | பெரிய ஹேட்டு | 0 3 4 |
| | | 80 0 18 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-ஊவா மாகாணத்தின் எல்லை, (கிறிந்தி ஓயா); தெற்கு-உனத்துவெவக் கிராம எல்லை, (தெகல்தெகிறஆற) முடிக்குரிய வெலகாவலந்துயாய; மேற்கு-முடிக்குரிய வெலகாவலந்துயாய.

[அம்பாந்தோட்டை வி. உ. 19—1925]

---

[அறிவித்தல் இலக்கம் 8,811, அம்பாந்தோட்டை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1925ம் ஆண்டு (மேய்) வைகாசிமீ 22 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். ரி. ஆர்ச்சிபோல்ட் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். ரி. ஆர்ச்சிபோல்ட்,
விசேஷ உத்தியோகத்தர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் றெஜிசர்) நில நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜனறல்) நிலகாரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் கம்பாந்தோட்டை டிஸ்திறிக் மாகம்பத்து அனுத்வெவக் கிராமத்திலிருக்கும் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

இன்செற் நம். 10. றொப்போ பிரதமபடம் நம் 3.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 118 | குளக்கட்டு | 0 3 10 |
| 119 | அனுத்வெவவெல | 14 2 8 |
| 120 | கன்சப்பாவஹேட்டு | 0 2 6 |
| 121 | அனுத்வெவவெல | 18 0 16 |
| | | 34 0 0 |

எல்லைகளாவன: வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு-முடிக்குரிய வெலகாவலந்துயாய.

[அம்பாந்தோட்டை, வி. உ. 20—1925.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,812, அம்பாந்தோட்டை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1925 ம் ஆண்டு (மேய்) வைகாசிமீ 22 ந் திகதி துவக்கம் மூன்றுமாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். ரி. ஆர்ச்சிபோல்ட் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக் குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். ரி. ஆர்ச்சிபோல்ட்,
விசேஷ உத்தியோகத்தர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் றெஜிசர்) நிலநிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் கம்பாந்தோட்டை டிஸ்திறிக் மாகம்பத்து அனுக்கன்கலக் கிராமத்திலிருக்கும் கீழ்க் குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

இன்செற் நம். 2. றொப்போ பிரதமபடம் நம். 3.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 16 | அனுக்கன்கலவெவகண்டிய (குளக்கட்டு) | 0 2 39 |
| 17 | பானுகொடலந்த (குளக்கட்டுச் சேமிப்பு) | 2 1 12 |
| 18 | மாதமேஆற (நீர்ரோடை வற்றிய) | 0 0 21 |
| 20 | காற்பாதை | 0 0 2 |
| 21 | பானுகொட | 1 1 15 |
| 22 | எல | 0 0 17 |
| 24 | பானுவெவ | 6 2 0 |
| 25 | காத்தப்பாதை | 0 3 0 |
| | | 11 3 26 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய வெலகாவலந்துயாய, பொட்கமவுக்குப் போகும் ரேட்டு, முடிக்குரிய வெலகாவலந்துயாய; கிழக்கு-எஸ். ஏ. குணசிங்கிஅப்புவும் மறுபேரு முரித்தாடும் நுககாவத்துயாய, முடிக்குரிய வெலகாவத்துயாய. டோனு லோறேன்சிய விசெசேகெர திஸ்நாயகவும மறுபேரு முரித்தாடும் அனுக்கன்கலவெல, முடிக்குரிய வெலகாவலந்துயாய; தெறகும் மேற்கும்-முடிக்குரிய வெலகாவலந்துயாய.

[அம்பான்தோட்டை வி. உ. 21—1925.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,813, அம்பாந்தோட்டை.]

இதனடியில் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1925 ம் ஆு (மேய்) வைகாசிமீ 22ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தரெம். ரி. ஆர்ச்சிபோல்ட் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லியவிசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய்வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம் ரி. ஆர்ச்சிபோல்ட்,
விசேஷ உத்தியோகத்தர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (சேற்றில்மென் ரெஜிசர்) நிலநிர்ணய உத்தியோகர்த்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதையறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் கம்பாண்தோட்டை டிஸ்திறிக் மாகம்பத்து கெலியாவலானக் கிராமத்திலிருக்கும் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

இன்செற் நம்பர் 11. ரொப்போ பிரதமபடம் நம். 3.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 122 | கன்சப்பாவ ரேட்டு | 0 | 0 | 14 |
| 123 | வெலகாவலந்த | 2 | 2 | 1 |
| 124 | குளக்கட்டு | 1 | 0 | 32 |
| 126 | கெலியாவலானவெல | 5 | 2 | 15 |
| 127 | கட்டு | 1 | 0 | 21 |
| 128 | சியம்பலகாவத்தை | 2 | 0 | 15 |
| | | 12 | 2 | 18 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய வெலகாவலந்துயாய; கிழக்கு-முடிக்குரிய வெலகாவலந்துயாய, (புல்லுக்கு விடப்பட்ட நிலம்); தெற்கும் மேற்கும்-முடிக்குரிய வெலகாவலந்துயாய.

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகளிவ்வறிவித்தலினின்று விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகும் 24 ஏக்கர் 38 பேட்சும் மேற்சொல்லிய 12 ஏக்கர் 2 றூட் 18 பேட்சக்குள்ளு மடங்கவில்லை என்பதையுங் கவனிக்கவேண்டியது:—

இன்செற் நம். 11. ரொப்போ பிரதமபடம் நம். 3

| காணித்துடு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 125 | கெலிய வலன வெல | 24 | 0 | 38 |

[அம்பாந்தோட்டை வி. உ. 22—1925.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,814 யாழ்ப்பாணம்.]

1897 ம் 1899 ம், 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் வெண்கிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானல், அவர்கள் 1925 ம் ஆு (மேய்) வைகாசிமீ 22 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே வடமாகாண அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி அவ்வரசாட்சி ஏசெண்டவர்கள் மேற் சொல்லப்பட்ட சட்டங்களினுல் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணியை முடிக்குரியதெனத் தமது கைச்சாத்திட்டு வெளியரங்கப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எவ். ஜே. ஸிமித்,
வடமாகாண அரசாட்சி ஏசெண்டர்.

(a) இக்காணியிலே யுள்ள வழியுரித் அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

(b) இக்காணியைப்பற்றிய மறுவிபரங்கள் வடமாகாண ஏசெண்டரிடமிருந்தும் படங்களைப்பற்றி அளவுகந்தோர்த் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதியைச்சேர்ந்த நவாலி என்னுங் கிராமத்திலுள்ளதும் 2 ஏக்கர் 3 றூட் 16 பேட்சு விசாலமுடையதும், 5,546 ம் பிரதமபடத்தில் 1 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும், சமானியமாய்க கல்லுண்டாயென அழைக்கப்படுவதுமான காணி. இதற்கெல்லைகளாவன வடக்கு-வி. வைரமுத்து உரித்தாடும் கல்லுண்டா; கிழக்கு-பி. முருகேசு உரித்தாடும் கல்லுண்டா, பி. தம்பையா உரித்தாடும் கல்லுண்டா, இ. திலலைநாதர் உரித்தாடும் கல்லுண்டா; தெற்கு-யாழ்ப்பாணத்திலிருந்து காரைதீவுக்குப் போகும் ரேட்டு; மேற்கு-வண்டிப்பாதை, முடியால் உரித்தாடும் கல்லுண்டா (5,546 ம் பிரதமபடத்தில் 1A காணித்துண்டு), வண்டிப்பாதை, எம். இராயலிங்கம் உரித்தாடும் வெல்லயக்காடு.

---

## அரசாட்சியாரின் விளம்பரம்.

1925 ம் ஆு-த்து கதிர்காம யாத்திரைக்காகிய கட்டளைப்பிரமாணங்கள்.

1. சௌக்கியாதார நோக்கமாக கதிர்காமத்தில் இசல திருவிழா நடக்கும் நாட்களும் யாத்திரிகள் கதிர்காமத்தில் தங்கக்கூடிய காலமும் 16 நாள் (அதாவது: 1925 ம் ஆண்டு ஆடிமீ 20 ந் திகதி தொடக்கம் ஆவணி 4 ந் தேதிவரைக்கும்) தான் என்பதாக இதனுல் நியமிக்கப்படுகிறது. மேற்சொன்ன தேதிக்குமுன் போய்ச் சேருபவர்களும் சொல்லப்பட்ட தேதிக்குப்பின் தங்கிநிற்கும் யாத்திரிகளெவரும் ஓர் குற்றஞ்செய்தவர்களாகக் காணப்படுவர்.

2. கதிர்காமத்தில் திருவிழா நடக்கும் காலத்தில் தொற்று வியாதி உண்டுபடின் கட்டளைகளைக் கைக்கொள்ளப் பண்ணுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தருக்கு திருவிழாவை நிறுத்தவும் யாத்திரிகளை அந்த ஊரைவிட்டு தங்களிடம் போகவும் இன்னபாதையாற் போகவேண்டுமென்றும் கட்டளையிடத் தத்துவமுண்டு.

3. நியமனம்பண்ணப்பட்டிருக்கும் தலைமைக்காரருக்கு கதிர்காமத்திலும் திரும்பிச்செல்லும் பயணத்திலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச் செய்யவும் செய்விக்கவு மதிகாரமுண்டு:—

(a) யாத்திரிகளுக்குச் சீலை துவைக்கவும், முழுகவும், தண்ணீரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும் மலபாதைக்குப் போகவுங் வேறுவேறு தலங்களை நியமிக்கவும்;

(b) அந்தந்தச் சாதியார் தங்கியிருக்கும்படி வேறே வேறே தலங்களை நியமிக்கவும்;

(c) யாத்திரிகள் கூட்டமாக இன்னபாதையால் செல்லவேண்டுமென்றும்;

(d) யாத்திரிகளுக்குக் கொடுக்கப்படும் தீன் பகிர்ந்துகொடுத்தலைப் பார்த்துநடத்தவும்;

(e) நோய்கொள்ளும் யாத்திரிகளுக்குத் தங்கி யிருக்கும்படி வேறே தலத்தை வேறுக்கிவைக்கவும் ஆட்களுடன் வேறொருவரையும் கலவாம லிருக்கும்படிபண்ணவும் அவர்களுக்குப் பயணம் போகக்கூடாதுபோனால் நிறுத்திவைத்திருக்கவும்;

இவ்விதம் நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரி பண்ணும் கட்டளையை மீறுபவர் ஓர் குற்றமுடையவராகக் கொள்ளப்படுவர்.

4. பயணத் தல்லது தங்கியிருக்குமிடத்தில் சுகத்துக்குப் பழுதாகுமென்று வைத்திய உத்தியோகஸ்தர் காணும் தீன்சாமா னெல்லாவற்றையும் பறித்து நாசமாக்கிப்போடவும் பொலீஸ் தத்துவ முடையவராயிருக்கிற தல்லாமலும் அவ்விதஞ் செய்யவிடாமல் தடைபண்ணுபவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படுவார்கள்.

5. சுகாதாரணைத் தலைமைக்கார னிடமிருந்து அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்த ரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெறுமல் மாடுகளை அல்லது வண்டி மாடுகளை தங்கியிருக்கு மிடமிருந்து காற்கட்டைக் குட்பட யாராகுல்த கொண்டுவந்தால் குற்றவாளிக ளாவார்கள். உத்தரவுச்சீட்டைப் பெறுவோர், தங்கியிருக்குமிடத்தில் சுகாதாரணைத் தலைமைக்காரனால் சனங்களின் பொதுச்சுகத்துக்காகவும், சுகாதாரணைக்காகவும் நியமிக்கப்படும் கட்டளைப் பிரமாணங்களை அனுசரிக்கக் கடமைப்பட்டவர்க ளாவார்கள்.

6. கதிர்காமத்தில் தங்கியிருக்கு மிடத் ததிகாரி நியமிக்கு மிடத்தைவிட வேறிடத்தி லிறைச்சி விற்பவர்கள் அல்லது சுகாதாரணைத் தலைமை அல்லது பொலீஸ் தலைமை அவர்களால் கெட்ட தீனென்று விலக்கப்பட்ட சாமான் விற்பவர்கள் குற்றவாளிக ளாவார்கள்

7. யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்கும் மிடத்தைவிட வேறே தலத்தில் மலங்கழிக்க சம்பவித்தால் அல்லது மலத்தை மண்ணினால் மூடாவிட்டால், அல்லது த[illegible]க்காரர் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றுக்கிறங்க அல்லது குளிக்கச்சம்பவித்தா லப்படிச் செய்தவர்கள் குற்றவாளிகளாய்க் காணப்படுவார்கள்.

8. தொற்றுவியாதியால் பீடிக்கப்பட்டவன் வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது அவரில்லாவிட்டால் பிரதான பொலிஸ் தலைமைக்கு அது விஷயத்தை அறிவிக்கத் தவறினு லல்லது வந்த நோயாளியை ஒளித்துவைக்க அல்லது அதற்கு உதவிசெய்பவர்கள் குற்றவாளிகளாவார்கள்

9. சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் வைத்துப் பொலிஸ் தலைமை நியமிக்கு மிடத்தில் விடுதி விடுவதல்லாமல் அப்படிச் செய்ய மறுக்கும் அல்லது செய்யாது விட்டுவிடும் எவரும் குற்றமுடையவராய்க் கொள்ளப்படுவர்.

---

## 1912 ம் ஆண்டின் 8 ல் இலக்க மதுபானதீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

### 1925–26 ம் ஆண்டு கள்ளு சாராயம், அன்னிய தேச குடிவகைத் தவறணைகளைப்பற்றி ஊர் சனங்களின் சம்மதி அறிவதைக் குறித்த விளம்பரம்.

மத்திய மாகாணம் மாத்தளை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசன்றுதுரை அவர்கள் 1922 ம் ஆண்டு ஆனி மாதம் 16 ந் திகதியையும் 130 ம் இலக்கத்தையும் கொண்ட குடிவகை விளம்பர பிரமாணங்களின் 5 ம் பிரமாணத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு தவறணையிலிருக்கும் பற்றுகளில் வசிக்கும் குடி சனங்களின் தலைவரிப் பணம் கொடுப்பவர்களுள் 100 க்கு 60 பெயர் அந்த தவறணை இருக்கிற இடத்தில் இருப்பதற்கு மாறோ என்று அறிவதற்கு பின் சொல்லப்படும் திகதியையும் இடத்தையும் நியமனம் செய்திருக்கிறார் என்று இத்தால் சகலரும் அறிய வேண்டியது.

மாத்தளைபட்டின பரிபாலனசங்கத்துக் குள்ளிருக்கும் கள்ளு, சாராயம், அன்னியதேசகுடிவகைத் தவறணைகளைப் பற்றி 1925 ம் ஆண்டு ஆனி (ஜூன்) மாதம் 16 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலமே 7 மணிதொடக்கம் பின்னேரம் 7 மணி வரைக்கும் மாத்தளை பறன்மெமோறியல் மண்டபத்தில் நடத்தப்படும். இவை மாத்தளைபட்டின பரிபாலன சங்கத்துக்குள்ளிருக்கிறவையும் அலவுகாரவசவும்.

மாத்தளைக்கச்சேரி.
1925 ம் ஆண்டு மேய்மீ 19 ந் திகதி

எச். ஆர். ஒப்டீ,
உதவி அரசாட்சி ஏசன்று.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: களுத்துறை நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் மேற்கு பிரிவின் டிஸ்திக்டைச்சேர்ந்த கிறிமினல் வழக்குவிசாரணை 1925ம் ஆண்டு யூன் மாதம் 1 ந் திகதியாகிய திங்கள்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும் ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்

இங்ஙனம்,
ஆர். ஓ. டீ சேறம்,
மேல்மாகாண பிஸ்கால் லுக்காக.

கொழும்பு, பிஸ்கால் கந்தோர்,
1925 ம் வரு மேய்மீ 18 ந உ.

---

H. ROSS COTTLE GOVERNMENT. PRINTER, COLOMBO, CEYLON.